# 14

# பாவமன்னிப்புக் கோருவோம்

மனிதன் பலவீனமானவன், பாவம் செய்யும் இயல்பினைக் கொண்டவன். அவனால் பாவங்களிலிருந்து முழுமையாக விடுபட்டு வாழ முடியாது. தான் செய்த பாவங்களை உணர்ந்து தன்னை மன்னித்து இரட்சிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்டு, மன்றாடும் போது அவனுக்கு மன்னிப்பை வழங்க அல்லாஹ் காத்திருக்கிறான்.

பாவமன்னிப்புக் கோருவது கடமையாகும். குர்ஆன் இதனைப் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளது.

‘‘விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்விடம் மிகத் தூய்மையாகவும் உண்மையாகவும் பாவமன்னிப்புக் கோருங்கள்’’ (அல்குர்ஆன் 66:08)

‘‘விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள்’’ (அல்குர்ஆன் 24:31)

இவை பாவமன்னிப்புக் கோரலை வலியுறுத்திக் கூறுகின்றன.

## பாவ மன்னிப்பின் முக்கியத்துவம்



1. பாவமன்னிப்புக் கோருமாறு அல்லாஹ் எமக்குக் கட்டளையிட்டுள்ளான். மன்னிப்புக் கோருதல் கடமை என்பதை இக்கட்டளை எடுத்துக் காட்டுகின்றது.
2. உத்தமர்களான நல்லடியார்களும், இறைநேசர்களும் கூட பாவமன்னிப்புக் கோரியுள்ளார்கள். ‘‘ஆதமுடைய மக்கள் அனைவரும் பாவம் செய்யக் கூடியவர்கள். பாவம் செய்வோரில் மிகச் சிறந்தவர் பாவமன்னிப்புக் கோருவோராவர்’’ (திர்மிதி) என்பது ஹதீஸாகும்.
3. பாவமன்னிப்புக் கோருவோரை அல்லாஹ் விரும்புகிறான். அதற்காக அவன் மகிழ்ச்சியடைகின்றான். ‘‘நிச்சயமாக அதிகமதிகமாக பாவமன்னிப்புக் கேட்போரையும் சுத்தமாக இருப்போரையும் அல்லாஹ் விரும்புகின்றான் (அல்குர்ஆன் 2:222).

4. பாவங்களை மன்னிப்பது அல்லாஹ்வின் பண்பாகும். அல்லாஹ் அடியானை மன்னிப்பதில் அதிகம் விருப்பம் கொள்கிறான். பாவமன்னிப்புக் கேட்டு அவனிடம் மீள்வோரை அவன் நேசிக்கின்றான். ''எவன் கைவசம் எனது ஆத்மா இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, வானம் பூமிக்கு இடைப்பட்ட பகுதியை நிரப்புமளவு நீங்கள் பாவம் செய்திருந்தபோதும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டால் அவன் நிச்சயமாக உங்களை மன்னிக்கவே செய்வான்'' (அஹ்மத்) என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

5. பாவமன்னிப்பு சுவனத்தைப் பெற்றுத் தரும். ''நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதிலும் சுவனத்தைப் பெறுவதிலும் முந்திக் கொள்ளுங்கள். அந்த சுவனம் வானம் பூமியின் அளவு விசாலமானது'' (அல்குர்ஆன் 3:133).

6. பாவமன்னிப்புக் கோராதோர் அநியாக்காரர்களாவர்; அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள்; அல்லாஹ் அவர்களை விரும்புவதுமில்லை. அவர்களுக்கு நேர்வழி காட்டுவதுமில்லை. ''யார் பாவமன்னிப்புக் கேட்கவில்லையோ அவர்கள் அநியாயக்காரர்களே'' (அல்குர்ஆன் 49:11).

இவை ஷரீஆவின் அடிப்படையில் பாவமன்னிப்புக் கோருவதை வலியுறுத்துகின்றன.

## நான் ஏன் பாவமன்னிப்புக் கோருகின்றேன்

பகுத்தறிவின் அடிப்படையில் நோக்கினாலும் பாவமன்னிப்புக் கோருவது அவசியமாகின்றது

- நான் மனிதன்; பலவீனமானவன்; பாவம் செய்யும் இயல்பு கொண்டவன்; ஆதலால் நான் செய்த பாவங்களுக்காக அவனிடம் பரிகாரம் தேடுகின்றேன்.
- எனது கவனயீனம், புறக்கணிப்பு போன்ற காரணங்களால் நிகழ்ந்த பாவங்கள் அதிகமானவை. தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றாமல் பிற்படுத்தியுள்ளேன். பெற்றோரின் உள்ளங்களை நோவினைப்படுத்தியுமுள்ளேன். இவற்றுக்காக நான் பாவமன்னிப்புக் கோருகின்றேன்.
- பாவம் என்று தெரியாத நிலையில் நான் செய்தவையும் உண்டு. அவற்றுக்காகவும் நான் பாவமன்னிப்புக் கோருகின்றேன்.
- அல்லாஹ் எமக்குச் செய்துள்ள அருட்கொடைகள் அளவிட முடியாதவை. அவற்றை நினைத்து அவனுக்கு நன்றி தெரிவிக்காமல் இருந்துவிட்டேன். அதற்காக நான் மன்னிப்புக் கோருகின்றேன். இதனைத்தான்,

அல்லாஹ் அருள் நிறைந்தவன்; மனிதன் செய்கின்ற தவறுகளை மன்னிக்கக் காத்திருப்பவன். ''எனது அடியார்களே, நீங்கள் இரவிலும் பகலிலும் தவறு செய்கிறீர்கள். நானோ அனைத்தையும் மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். எனவே என்னிடம் மன்னிப்புத் தேடுங்கள். நான் உங்களது பாவங்களை மன்னித்து விடுகின்றேன்'' என அல்லாஹ் கூறுகின்றான் (முஸ்லிம்).

''நீங்கள் பிழை பொறுக்கத் தேடுவதில் சலிப்படையும் வரை அல்லாஹ் மன்னிப்பளிப்பதில் சலிப்படைய மாட்டான்'' (பைஹகி) என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கிக் கூறுகிறார்கள்.

## பாவமன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகள்

1. மனிதன் சிறு பாவங்கள், பெரும் பாவங்கள் எனப் பல பாவங்களைச் செய்திருக்கலாம். அவற்றை எண்ணி அவனது உள்ளம் நெகிழ வேண்டும். அதற்காகக் கண்ணீர் விட்டு அழ வேண்டும். பாவச் சுமைகளோடு எனது இரட்சகனை எவ்வாறு சந்திக்க முடியும் என வருந்த வேண்டும்.
2. பாவம் நிகழும் சூழலிருந்து அவன் நீங்கிவிட வேண்டும்.
3. குறித்த பாவத்தை மீண்டும் செய்ய மாட்டேன் என உறுதிகொள்ளல் வேண்டும்.
4. மனிதர்களுடன் தொடர்பான பாவமெனில் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

பின்வரும் குர்ஆன் வசனத்தைக் கவனமாகப் படியுங்கள். அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.

‘‘(நபியே! நான் கூறியதாக) நீர் கூறும்: தமக்குத்தாமே தீங்கிழைத்துக்கொண்ட எனது அடியார்களே! (உங்களில்) எவரும் (வரம்பு மீறித் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டபோதிலும்) அல்லாஹ்வின் அருளில் நீங்கள் நம்பிக்கையிழந்து விட வேண்டாம். (நீங்கள் பாவத்திலிருந்து விலகி, மனம் வருந்தி மன்னிப்பைக் கோரினால்) நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய பாவங்கள் யாவற்றையும்) மன்னித்து விடுவான். ஏனென்றால், நிச்சயமாக அவன் கிருபையுடையோனாக இருக்கின்றான்’’ (அல்குர்ஆன் 39:53).

அல்லாஹ் மனிதனுக்கு நன்மைகளையும் தீமைகளையும் வேறுபடுத்திக் காண்பித்திருக்கின்றான். மனிதன் நன்மை செய்ய வேண்டும், தீமைகளையும் பாவங்களையும் தவிர்ந்து நடக்க வேண்டும் என்றே அல்லாஹ் விரும்புகின்றான். எனினும் மனிதன் தனது பலவீனத்தினாலும் ஷைத்தானின் தூண்டுதலினாலும் சிலபோது பாவங்களின் பக்கம் சாய்கின்றான்.

‘‘நன்மை என்பது நற்பண்புகளாகும். தீமை என்பது உள்ளத்தை உறுத்துகின்ற, மக்கள் அதனை தம்மிடமிருப்பதாகக் காண்பதை வெறுக்கின்ற செயல்களாகும்’’ (முஸ்லிம்) என முஹம்மத் நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உள்ளத்தை உறுத்துகின்ற பாவச் செயல்கள், பெரும் பாவங்கள், சிறு பாவங்கள் என இருவகைப்படும். பெரும் பாவங்கள் என்பது அல்லாஹ்வால் உலகில் தண்டனைகள் நிர்ணயிக்கப்பட்ட அல்லது மறுமையில் நரகைக் கொண்டு எச்சரிக்கப்பட்ட அல்லது அல்லாஹ்வினது கோபத்திற்கும் சாபத்திற்கும் உரியவை என குறிப்பிடப்பட்டவைகளாகும். ஏழு பெரும் பாவங்களைத் தவிர்ந்து நடக்கும்படி முஹம்மத் நபி ﷺ அவர்கள் போதித்துள்ளார்கள்.

அவையாவன:

1. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்
2. சூனியம் செய்தல்

3. கொலை செய்தல்
4. அநாதைகளின் சொத்துக்களைக் கையாடல்
5. வட்டி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல்
6. போராட்ட களத்திலிருந்து ஒதுங்கி ஓடுதல்
7. கற்புள்ள பெண்கள் மீது அபாண்டம் சுமத்துதல். (புஹாரி)

இந்த ஹதீஸ் பெரும் பாவங்களை ஏழு என வரையறுத்துக் குறிப்பிட்டாலும் இவை தவிர்ந்த வேறு சில பெரும் பாவங்கள் பற்றியும் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உதரணமாக, காரணமின்றி தொழுகை, ஸகாத், நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றாதிருத்தல், பெற்றோரை நோவினை செய்தல், உறவுகளைத் துண்டித்து நடத்தல், பெருமையடித்தல், திருடுதல், சூதாடுதல், மது அருந்துதல், பொய்ச் சாட்சி சொல்லல், சாபமிடல், கோள் சொல்லல், தற்கொலை செய்தல் போன்ற பல பெரும் பாவங்களை ஹதீஸ்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அடியான் பெரும் பாவங்கள் செய்தால் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவற்றுக்காகத் தவ்பாச் செய்ய வேண்டும்.

சிறு பாவங்களைப் பொறுத்தமட்டில் அவை அடியான் புரியும் நற்செயல்கள் மூலம் மன்னிக்கப்படுகின்றன. ''பகலின் இரு முனைகளாகிய காலை, மாலைகளிலும் இரவின்சில நேரங்களிலும் நீங்கள் தவறாது தொழுது வாருங்கள். நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும். (இறைவனை) நினைவுகூருவோருக்கு இது ஒரு நல்லுபதேசமாகும்'' (11:114).

மேலும் ''ஒரு முஸ்லிம் பர்ளான தொழுகையை அழகிய முறையில் வுழூச் செய்து உள்ளச்சத்துடன் அதன் ருகூவுகளைப் பேணித் தொழுவாரானால் பெரும் பாவங்களைத் தவிர அவர் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் அது பரிகாரமாகும். இது எல்லாக் காலத்திற்கும் உரியதாகும்'' (முஸ்லிம்) என முஹம்மத் ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

எமது வாழ்விற்கு...

நாம் அன்றாடம் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவோம்.

எமது பாவங்களிலிருந்து நீங்கி அல்லாஹ்வின் பக்கம் மீளுவோம்.

**பயிற்சி:**

1. நாம் ஏன் பாவமன்னிப்புக் கோர வேண்டும்?
2. நாம் எவ்வாறு பாவங்களிலிருந்து விலகி நிற்கலாம்?
3. பாவங்கள் மன்னிக்கப்பட அவசியமான நிபந்தனைகள் யாவை?
4. அல்குர்ஆன் - ஹதீஸ் கூறும் பெரும் பாவங்களைப் பட்டியல்படுத்துக.